JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 108/2020 Date:15.06.2022 P.W.

| | | |
|---|---|---|
| பெயர் | ° | பழனி |
| தந்தை பெயர், க/பெ | ° | சுப்பரமணி |
| முகவரி | ° | |
| கிராமம் | ° | |
| மாவட்டம் | ° | |
| ஜாதி | ° | |
| தொழில் | ° | |
| மதம் | ° | |
| வயது | ° | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 15th day of June 2022.

**முதல் விசாரணை** - நான் தற்போது நம்பர் 244 பிள்ளையார் கோவில் தெரு, ஐயனூர் வின்னமங்களூர் போஸ்ட் ஆம்பூரில் குடியிருந்து வருகிறேன். நான் பஞ்சாப்பு நேஷனல் வங்கியில் அதிகாரியாக வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்பு பஞ்சாப்பு நேஷனல் வங்கி ஏஎம்எஸ் கிளையில் வங்கி அதிகாரியாக பணியாற்றி வந்தேன். ஏஎம்எஸ் கல்லூரி பஞ்சாப்பு நேஷனல் கிளையுடன் இணைந்த ஏடிஎம்மில் சுமார் 1 1/2 வருடத்திற்கு முன்பு திருட யாரோ முயற்சி செய்துள்ளனர் என்று எனக்கு போன் மூலம் தகவல் வந்தது. பஞ்சாப்பு நேஷனல் வங்கியிலிருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் ஏடிஎம்மில் சம்பவயிடத்திற்கு நான் வந்து பார்த்தபோது திருட முயற்சி செய்த நபரை போலிசார் பிடித்து சென்றுவிட்டனர்.பிறகு ஏடிஎம் மூடப்பட்டுவிட்டது. இது குறித்து மேலாளர் தனலட்சுமி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தபோது மேற்கண்டவாறு கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

எனக்கு சம்பவம் குறித்து யார் தகவல் கூறினார்கள் என்றால் போன் மூலமாக கேஸ் பியுன் தகவல் எனக்கு தகவல் கொடுத்தார். இரவு சுமார் 12.30 மணியளவில் எனக்கு தகவல் கிடைத்தது. நான் எத்தனை மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றால் இரவு 12.30 மணியளவில் நான் சம்பவயிடம் சென்றுவிட்டேன். சம்பவயிடத்திற்கு யார் என்னுடன் வந்தார்கள் என்றால் நான் மட்டும் தனியாக தான் ஏடிஎம் மையத்திற்கு சென்றேன். நான் சம்பவயிடத்திற்கு சென்ற போது கேஸ் பியுன் மற்றும் கேஸ்ஷியரும் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார்கள் நான் சம்பவயிடத்தறிகு சென்ற போது ஏடிஎம் மையம் ஷெர்ட்டர் போட்டு மூடப்பட்டது என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு சென்ற சமயத்தில் ஏடிஎம் இயந்திரம் எவ்வாறு உடைக்கப்பட்டது ஏடிஎம் மையத்தில் என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் ஏடிஎம் மையத்தை மூடி வைத்தியிருந்தார்கள். போலீஸ்க்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் தலைமை அலுவலகத்திலிருந்து தகவல் கொடுத்தார்கள். தலைமை அலுவலகத்திலிருந்து போலீஸிக்கு தகவல் அளித்த விவரம் எனக்கு எவ்வாறு

தெரியும் என்றால் வங்கி மேலாளர் என்னிடம் கூறினார். புகார் கொடுப்பதற்கு வங்கி மேலாளர் உடன் நான் சென்றேனா என்றால் செல்லவில்லை. போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் போலிசார் என்னிடம் முகவரி மட்டும் தான் கேட்டார்கள். நான் சொல்லுவது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் உயர் அதிகாரி கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை-** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted by the witness as correct.

Sd/- V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur

JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No.108/2020 Date:15.06.2022 P.W. 2

| | | |
|---|---|---|
| பெயர் | ° | சுதிர் |
| தந்தை பெயர், க/பெ | ° | பத்மநாபன் |
| முகவரி | ° | |
| கிராமம் | ° | |
| மாவட்டம் | ° | |
| ஜாதி | ° | |
| தொழில் | ° | |
| மதம் | ° | |
| வயது | ° | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1983 of the 15th day of June 2022.

**முதல் விசாரணை** - நான் தற்போது நம்பர் 13ஏ, சபி நகர், 3வது தெரு, 1வது குறுக்கு ெ தரு, முத்தாப்புதுபேட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் பஞ்சாப்பு நேஷனல் வங்கியில் காசாலராக வேலை செய்து வருகிறேன். 05.12.2019 தேதி நடு இரவு 3.00 மணிக்கு போன் மூலம் பஞ்சாப்பு நேஷனல் ஏஎம்எஸ் கிளை ஒட்டியுள்ள ஏடிஎம்மில் திருட முயற்சி செய்வதாக போன் மூலம் தகவல் வந்தது. நான் உடனடியாக சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தபோது ஏடிஎம் மூடப்பட்டுயிருந்தது. காவல் துறையினர் அங்கு இருந்தனர் எங்கள் வங்கியை சார்ந்த மற்ற அலுவலர்களும் அங்கு வந்தார்கள். அன்றைய தினம் தான் ரூ. 16 லட்சம் லிருந்து ரூ.17 லட்சம் வரை பணம் போட்டுயிருந்தார்கள். இது சம்மந்தமாக எங்களுடைய மேலாளர் தனலட்சமி அவர்கள் புகார் கொடுத்ததின் பேரில் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**
நான் ஏடிஎம் மையத்திற்கு சென்று பார்த்தபோது ஏடிஎம் மையத்தில் உள்ள கதவு திறந்துயிருந்தது பொருத்தப்பட்டுயிருந்த கேமராக்களில் கருப்பு கலர் பெயிண்ட் அடிக்கப்பட்டுயிருந்தது. எனக்கு அசா.1 சம்பவம் குறித்து தகவல் கொடுத்தார். நான் சம்பவயிடத்திற்கு சென்றபிறகு தான் அசா.1 சம்பவயிடத்திற்கு வந்தார். ஏடிஎம் மையத்திற்கு சம்பவத்தை கேள்விப்பட்டு அன்றைய தினம் சென்றதற்கு பின்பாக மீண்டும் நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றால் சரிதான். மேலாளர் புகார் கொடுக்கச் சென்ற போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. காவல் துறையினருக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் தலைமை அலுவலகத்திலிருந்து தகவல் கொடுத்தார்கள். தலைமை அலுவலகத்திலிருந்து போலீஸ்க்கு தகவல் கொடுத்த விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் போலிசார் தான் என்னிடம் கூறினார்கள். போலிசார் என்னை சம்பவயிடத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்கள். நான் சொல்லுவது போல் எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் உயர் அதிகாரிகள் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை-** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/- V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur